DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Proceedure)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 210/2023

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | Arumugam |
| Father / Husband Name | Munusamy |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.05.2024

**குறுக்கு விசாரணை**

1. வழக்கின் எதிரி மின்னல் சித்தாமூரை சேர்ந்தவர். எதிரியை எனக்கு 10 வருடமாக தெரியும். இந்த வழக்கு தொகை கொடுப்பதற்கு முன்பு எனக்கு எதிரிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இருமுறை இருந்தது. அதனை கொடுத்துவிட்டார்கள். அதற்கான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி தொகைகள் 2021 மற்றும் 2022 வருடங்களில் வாங்கப்பட்டது. எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியிடம் ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்த விவரத்தையும் 10 ஆண்டுகளாக பழக்கம் என்ற விவரத்தையும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. எதிரியின் சகோதரர் பெயர் தெரியுமா என்றால் சலீம் என்று ஞாபகம். அவரும் என்னுடன் நன்கு பழக்கம் உடையவர். சலீம் என்பவர் அவரது திருமணத்திற்கு சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு என்னிடம் பத்திரிகை வைத்தார். அவரது கல்யாணம் எப்போது என்று தேதி ஞாபகமில்லை. நான் சலீம் என்பவரிடம் எதிரி என்னிடம் வாங்கிய தொகையை குறித்து கேட்டேனா என்றால் எதிரியிடம் பணம் கொடுத்து 15 நாட்களுக்கு பிறகு சலீம் என்பவரிடம் அவரது திருமணத்திற்காக தான் எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்று சொல்லி பணத்தை கேட்டேன். சலீம் அதற்கு தன் தம்பி பணத்தை தந்துவிடுவார் என்று சொன்னார்.

3. எதிரியிடம் பணம் கொடுக்கும் போது வட்டிக்கு கொடுத்தேனா என்றால் ஆமாம். 2% வட்டிக்கு கொடுத்தேன். எதிரியிடம் பணம் கொடுத்த போது வட்டி பணம்

பிடித்து கொண்டு கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் 20.03.2023ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு என் வீட்டில் வைத்து வேறு யாரும் இல்லாத போது பணம் கேட்டார். நான் தருவதாக சொல்லி அனுப்பி வைத்தேன். மேற்படி விவரங்களை எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் 13.04.2023ம் தேதியன்று காலை 08.30 மணிக்கு பணத்தை என் வீட்டில் வைத்து வேறு யாரும் சாட்சிகள் இல்லாத சமயத்தில் கொடுத்தேன். மேற்படி விவரங்களை எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. எதிரியிடம் பணம் கொடுத்த பிறகு 15 நாட்கள் கழித்து பணத்தை கேட்டேன். அதன்பிறகு 10 நாட்கள் கழித்து கேட்டேன். மேற்படி விவரங்களை எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கு தொகையை 500 தாள்களாக இரண்டு ரூபாய் 50,000/- கட்டுகள் கொடுத்தேன். பணம் கொடுத்த போது புகைப்படம் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. எதிரியிடம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பவுஞ்சூர் கிளை காசோலையை 13.06.2023 அன்று எதிரியின் வீட்டில் வைத்து பெற்றேன். அப்போது வேறு சாட்சிகள் யாரும் இல்லை. எந்த ஆவணமும் பெறாமல் பணம் கொடுத்தேனா என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன். பாண்டு எதுவும் பெறவில்லை. காசோலை மட்டும் தான் பெற்றேன்.

5. நான் பெற்ற கொண்ட காசோலை எண் 153200 ஆகும். நான் காசோலையை பெற்ற அன்றே சென்டரல் பேங்க் ஆப் இந்தியா, கடைமலை புத்தூர் கிளையில் செலுத்தினேன். மேற்படி வங்கியில் 20-25 ஆண்டுகளாக வங்கி கணக்கு வைத்துள்ளேன். ஒரே வங்கியில் தான் கணக்கு வைத்துள்ளேன். மேற்படி காசோலை பணம் இல்லை என்ற காரணத்தினால் 20.06.2023ம் தேதியன்று திருப்பப்பட்டது. திருப்பப்பட்ட மெமோவில் Funds Exceed Arrangement என்று குறிப்பு உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. காசோலை தொகை ஏதேனும் தொகையை எதிரி செலுத்தியுள்ளாரா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் டைரியில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. மேற்படி கையெழுத்தை நிபுணர் வைத்து பார்த்தால் யாருடைய கையொப்பம் என்பது தெரிய வரும் என்றால் சரிதான்.

6. நான் எதிரியின் அண்ணனிடம் பேசினேனா இல்லையா என்பதை அவரை அழைத்து விசாரித்தால் தெரிய வரும் என்றால் தெரியும். எதிரியின் டைரியில் 11.03.2022ம் தேதியன்று ரூ.5500, 17.04.2022 ம் தேதியன்று ரூ.5200, 15.05.2022 ம்

தேதியன்று பாக்கி, 15.06.2022 ம் தேதியன்று ரூ.10700, 15.07.2022 ம் தேதியன்று பாக்கி, 15.08.2022 ம் தேதியன்று பாக்கி, 15.09.2022 ம் தேதியன்று பாக்கி, 15.10.2022 ம் தேதியன்று பாக்கி, 18.11.2022 ம் தேதியன்று ரூ.9000, 04.02.2023 ம் தேதியன்று ரூ.5000, 13.02.2023 ம் தேதியன்று ரூ.5200 மற்றும் 03.07.2023 ம் தேதியன்று ரூ.5000 இந்த தொகை அனைத்தும் எதிரியிடம் இருந்து நான் பெற்ற தொகைகள் என்றாலும் அதற்கான கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

7. நான் எதிரியிடம் பணத்தை பெற்று விட்டு எதிரி என்னிடம் ரூ.1 இலட்சம் பெற்றதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் பணம் கொடுக்கவில்லை என்றாலும் காசோலை வாங்க வில்லை என்றாலும் அறிவிப்பிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்ட தேதிகளுக்கு முன்பே எனக்கும் எதிரிக்கும் பணம் தரவேண்டிய பாக்கி உள்ளது என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் எதிரி இதுவரை எந்த பணமும் தரவில்லை என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் எதிரி தீயநோக்கத்தோடு என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கான காரணம் அவர் காசோலை கொடுத்து பணம் தராமல் ஏமாற்றி விட்டார் என்பதை சொல்லியுள்ளேன்.

8. நான் சட்டத்திற்கு புறம்பாக கிராமத்தில் உள்ளவர்களை ஏமாற்றி வட்டிக்கு விடும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் உரிமம் எதுவும் பெறவில்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. வழக்கு தொகையை எவ்வாறு எனக்கு வரவானது என்றால் நான் 2020 ம் ஆண்டு எனது நிலத்தை விற்ற பணம் ஆகும். அந்த பணத்தை வைத்து தான் அனைவருக்கும் வட்டி விடுகிறேனா என்றால் இல்லை. மேற்படி நிலம் விற்ற பணத்தை மூன்று வருடமாக வீட்டில் வைத்திருந்தேனா என்றால் ஆமாம். நான் மக்களிடமிருந்து 10% வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

9. நான் சொன்ன தேதியில் பணம் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி என்னிடம் காசோலை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. காசோலையில் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் ரூ.20 பத்திரத்தில் மட்டும் தான் எதிரி கையொப்பம் செய்தார் என்றாலும் நானோ வேறு யாரோ காசோலையில் அதை பார்த்து கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. காசோலையில் மேலே உள்ள

விவரங்கள் யார் நிரப்பியது என்றால் எதிரி காசோலை கொடுக்கும் போதே நிரப்பி தான் கொடுத்தார். காசோலையை யார் நிரப்பியது என்ற விவரம் எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையது அல்ல என்றாலும் என்னை சார்ந்தவர்கள் எழுதியது என்றாலும் சரியல்ல.

10. இந்த நீதிமன்றத்தில் மாரியம்மாள் என்பவருக்கு எதிராக நான் தாக்கல் செய்த காசோலை வழக்கிலும் இருக்கும் காசோலையில் இதே கையெழுத்து தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காசோலைகள் அனைத்திலும் ஒரே கையெழுத்து தான் உள்ளது என்றாலும் நான் தொடர்ந்து இவ்வாறு செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. இந்த காசோலையையும் சிசி 209/2023 என்ற மாரியம்மாள் வழக்கில் காசோலையையும் ஒப்பிட்டு பார்த்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். மின்னல் சித்தாமூர் கிராமத்தில் மூன்று நபர்கள் மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதில் ஒரு நபர் வழக்கு நிலுவையில் உள்ள போது செட்டில்மெண்ட் செய்துவிட்டார். மீதி இரண்டு வழக்குகள் நிலுவையில் உள்ளது.

11. மின்னல் சித்தாமூர் கிராமத்திற்கு அருகில் உள்ள மற்ற கிராமங்களில் உள்ள நபர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி நிரப்பப்படாமல் கொடுத்த காசோலையை நான் பெற்று அதை நிரப்பி கையொப்பம் செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி பாண்டு பேப்பரில் செய்த கையொப்பத்தை தவறாக இவ்வழக்கிற்கு பயன்படுத்தி பொய் சாட்சியம் அளிக்கறேன். என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.